★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.
மலர் 4] சென்னை: ஆடி 31உ புதன் (15—8—56) ★ ★ வெளியூர் : ஆவணி 1உ வியாழன் (16—8—56) [இதழ் 56

ரஷ்யாவிற்கு ஆறு தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் தேவையாம்!

புதுடில்லி, ஆக. 14—

ரஷ்ய சர்க்கார், இந்தியாவிலிருந்து சுமார் 39 மொழி பெயர்ப்பாளர்கள் வேண்டுமெனக் கேட்டிருப்பதாக மக்கள் சபையில் நேரு தெரிவித்திருக்கிறார்.

தமிழ் 6—தெலுங்கு 6—இந்தி 11—வங்காளி 9—உருது 7—என்ற எண்ணிக்கையில் மொழிபெயர்ப்பாளர்கள் வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளதாம்.

தமிழ் 2—தெலுங்கு 2—இந்தி 2—வங்காளி 1—என்ற எண்

(4-ம் பக்கம் பார்க்க)

'எங்களுக்குக் கடவுள் மத நம்பிக்கை உண்டு'

'நம்பிக்கை இல்லை என ஒருபோதும் கூறியதில்லை !'

ஆந்திர கம்யூனிஸ்டுத் தலைவர் விளக்கம்

கர்னூல், ஆக. 14—

"கடவுளிடத்திலோ, மதங்களிலோ எங்களுக்கு நம்பிக்கையில்லை என்று நாங்கள் ஒரு போதும் கூறியதில்லை," என்று, கம்யூனிஸ்டு தலைவர்களுள் ஒருவரான பி. வெங்கடேசுவரலு என்பார், ஆந்திர சட்டசபைக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டதாகத் தெரியவருகிறது.

மத நிறுவனங்களின் 'டிரஸ்டி'களாகப் பணிபுரியும் பிரதேசக் கமிட்டிகளில், கம்யூனிஸ்டுகள் இடம் பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அந்தக் கமிட்டிகளில் கம்யூனிஸ்டுகளுக்குக் கட்டாயம் இடம் வேண்டுமென வற்புறுத்திப் பேசிய அவர், கடந்த காலத்தில் கம்யூனிஸ்டுகள் அதுபோன்ற கமிட்டிகளில் வேலை செய்திருக்கின்றபோது, இப்போது மட்டும் அவர்கள் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் என்று கூறிட முடியாது என்றும் அவர் வாதாடியிருக்கிறார்.

இவருக்கு முன் பேசிய மந்திரி சந்திரமௌலி, கம்யூனிஸ்டுகள் இந்தக் கமிட்டிகளில் சேர்க்கப்படாததற்கு அவர்கள் எதிர்க்கட்சியினர் என்பதல்ல காரணமென்றும், அவர்கள் கடவுள் மத நம்பிக்கையற்றவர்கள்' என்பதுதான் காரணம் என்றும் கூறியிருக்கிறார்.

இதனை மறுத்துத்தான் கம்யூனிஸ்டு உறுப்பினர் வாதிட்டிருக்கிறார்.

பண்டாரநாயகா இந்தியா வருகிறாம்!

புதுடில்லி, ஆக 14—

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா வரும் நவம்பர் திங்களில் இந்தியா வருவார் என்று தெரியவருகிறது.

பிரதமர் நேரு விடுத்திருந்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், 'புத்த ஜெயந்தி' விழாவில் அவர் கலந்துகொள்வார் எனவும் கூறப்படுகிறது.

***

பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

அவர்களுக்கு

★

ஈரோடு நகராட்சி

வரவேற்பு

ஈரோடு நகருக்கு தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் வருகையை முன்னிட்டு, ஈரோடு நகராட்சி மன்றத்தாரால் 19—8—56 மாலை 5-30 மணிக்கு நகராட்சி மண்டபத்தில் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்படும்.

***

கோபால ரெட்டி பதவிக்கு ஆபத்து?

என். ஜி. ரங்காவை புதிய ஆந்திரத்தின் முதன்மந்திரியாக்க முயற்சி?

கர்னூல், ஆக. 15—

ஆந்திர முதன்மந்திரி கோபால ரெட்டி, புதிய பெரிய ஆந்திர பிரதேச மாகிலம் அமையும்போதும் தொடர்ந்து முதன் மந்திரியாவதற்குரிய சாத்தியக் கூறுகள் சந்தேகிக்கப்படுகின்றன; அவரை முதன் மந்திரி பதவியிலிருந்து துரத்த முயற்சிகள் நடக்கின்றன என்று கூறப்படுகிறது.

ஆந்திர பிரதேசம் அமையும்போது தெலிங்கானா உறுப்பினர்களும் ஆந்திர சட்டசபைக்கு வருவர். அவர்களும் சேர்ந்த பிறகு உள்ள சட்டசபை காங்கிரஸ் கட்சிக்குப் புதிய தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டும்," என்று, ஆந்திர காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் பலர் கையெழுத்துக்களைச் சேகரித்து, மேலிடத்திற்கு அனுப்பிவைக்க முயற்சிகள் நடைபெறுகின்றனவாம்.

இந்த முயற்சியினை, கிருஷிகர் லோக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், இப்போது ஆந்திர ஐக்கிய காங்கிரஸ் கட்சியிலிருப்பவர்கள் ஆகியோர் செய்து வருகின்றனராம்.

இவர்கள் இப்போது, மக்கள் சபை உறுப்பினராக உள்ள என். ஜி. ரங்காவைத் தலைவராக்கவும் முயற்சிக்கிறார்களாம்; அதற்காகவும், 146 ஆந்திர சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களில் சுமார் 40 பேர்களிடம் கையெழுத்து வாங்கி வருகின்றனராம்.

தெலிங்கானாவிலிருந்து வரக்கூடிய சட்டசபை உறுப்பினரில் சுமார் 50 பேர் வரை காங்கிரசார் என்றும், இவர்களில் 25 பேர்களின் ஆதரவைப் பெற்றுள்ள கே. வி. ரங்கா ரெட்டி சீக்கிரமே கர்னூல் வந்து, என். ஜி. ரங்காவின் ஆதரவாளர்களைச் சந்தித்துப் பேசுவார் என்றும் கூறப்படுகிறது.

புதிய ஆந்திரத்தின் சட்டசபையில் சுமார் 200 உறுப்பினர்கள் வரை காங்கிரசாராக இருப்பர் என்று தெரிய வருகிறது.

பொதுச்செயலாளருக்கு குடந்தை நகராட்சியில் வரவேற்பு

குடந்தை, ஆக. 14—

"குடந்தை நகராட்சி எனக்கு அளிக்கும் வரவேற்பு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெருமையும் மதிப்பும் தரும் நிகழ்ச்சியாகும். கருத்துவேற்றுமைக்கு இடமளிக்கும் பெருந்தன்மையையும் அரசியல் நாகரீகத்தையும் குடந்தை நகராட்சி, பெற்றிருப்பது பெரிதும் போற்றிப் பாராட்டத்தக்கது. கட்சியின் பேரால் போட்டி போட்டு நிற்கும் தன்மை பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்குந்தான் அவசியமான ஒன்றே ஒழிய, நகராட்சி போன்ற தன்னாட்சி மன்றங்களுக்குக் கட்சி மாச்சரியம் அவசியம் இல்லை. அறிவும் ஆற்றலும், செயலாற்றும் திறனும், பொதுப்பணியில் அக்கரையும் கொண்டவர்கள் எக்கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அத்தகையோரை மட்டுமே தேர்ந்தெடுக்கும் தன்மை ஏற்படவேண்டும்"

என்று, குடந்தை நகராட்சி மன்றம் தமக்களித்த வரவேற்புரைக்குப் பதிலளிக்கும் முறையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

அவர் மேலும், நகராட்சி மன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ளவேண்டிய கடமைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

குடந்தை நகர மன்ற வரலாற்றில் சிறப்புக்கும், பெருமைக்கும், வியப்புக்கும் உரிய நிகழ்ச்சியாகக் குறிப்பிடத்தக்க வகையில், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, 12—8—56 மாலை, குடந்தை நகராட்சியினரால் நல்வரவேற்பு மிகப் பொலிவு பெற அளிக்கப்பட்டது.

குடந்தை நகராட்சியில் தி மு. க. பொதுச்செயலாளருக்கு வரவேற்பு என்ற செய்தியைக் கேள்வியுற்றவுடன் குடந்தை மக்களில் பெரும்பாலோர் வியப்புற்றனர்; கழகத் தோழர்களும் கழக ஆதரவாளர்களும் அதனை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்று, வரவேற்பு நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஐந்தாறு நாட்களுக்கு முன்பிருந்தே இதைப்பற்றிய பேச்சே குடந்தை நகர மக்களிடத்தே நிலவியிருந்தது.

12—8—56 மாலை சரியாக 4-30 மணிக்குப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

குடந்தை நகராட்சித் தலைவர் டாக்டர் வி. ஆர். மூர்த்தி பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் வரவேற்பு இதழை வழங்குகிறார்.

—போட்டோ : குடந்தை மு. இராசமாணிக்கம்

குடந்தை நகராட்சித் தலைவர் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள் வரவேற்பு இதழ் படித்துக் கொண்டிருக்கிறார். நகராட்சி ஆணையர் தோழர் முத்துராமலிங்கம், பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன், நகராட்சித் துணைத்தலைவர் தோழர் பி. ஆர். பொன்னுச்சாமி ஆகியோர் வீற்றிருக்கின்றனர்.

—போட்டோ : குடந்தை மு. இராசமாணிக்கம்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—8—'56 புதன்

பிள்ளைவரம் கேட்ட காரிகை!

மொழிவழியில் மாகாணங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் எனக் கூறிவந்த காங்கிரஸ் கட்சி, ஏகாதிபத்திய ஆட்சியிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு அந்தக் கோட்பாட்டைக் கைவிட்டுவிட முன்வந்தது. ஏகாதிபத்தியம் செய்துவைத்திருக்கும் இரு மொழி, மும்மொழி மாகாண ஏற்பாடுதான் சிறந்தது எனச் சாதிக்கவும் தொடங்கிவிட்டது.

குறிப்பிட்ட ஒரு மொழி வழியைச்சேர்ந்த ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாக இருந்திரக்கூடிய—கட்டாயமாக இருக்க வேண்டிய தாய் மொழிப்பற்றை 'மொழிவெறி' எனக் கேலி பேசிடவும் வன்மையாகக் கண்டிக்கவும் காங்கிரஸ் முன்வந்தது. இப்போக்கின் மூலமாக நியாயமாகச் செயல்பட வேண்டிய மொழிப்பற்றையும்கூட, செயல்படவொட்டாமல் தடுத்துவிட வேண்டுமெனக் காங்கிரஸ் எண்ணிக்கொண்டது.

• மொழி வளர்ச்சியைக் கருத்துள் கொண்டு, இருந்துவரும் தாய்மொழிப்பற்றின் காரணமாகத் தூய்மையான நல்லெண்ணத்துடன், குறிப்பிட்ட ஒரு மொழியை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் எனக்கோருபவர்கள் அனைவரையும், 'நாட்டுத் துரோகிகள்' எனப்பழித்துக் கூற காங்கிரஸ் துணிவு கொண்டு விட்டது. அவர்கள் கோரிக்கைகளுக்கு இணங்கி விட்டால், இந்தியத் துணைக்கண்டத்தின் ஒற்றுமை உடைந்து உருக்குலைந்துவிடும் எனவும், காங்கிரஸ் அச்சம் தெரிவிக்கத் தொடங்கிவிட்டது.

உறுதிப்படுத்தப்படாத அத்தகு அச்சத்தைக் கொள்வதுடன் காங்கிரஸ் நின்றுவிடவில்லை. அதற்கு மேலும் சென்று காங்கிரஸ், இருமொழி, மும்மொழி மாகாணங்களை உருவாக்குவதற்குரியத் தேவையை துளியும் பொருத்தமற்ற காரணங்களைக் காட்டி வாதிடவும் தொடங்கி விட்டது.

மொழிவழியில் மாகாணங்களைத் திருத்தி அமைப்பதிலுள்ள எச் சிறப்பியல்களை, முதல்முதலாக ஆணித்தரமாக எடுத்துக் காட்டி வந்திருப்பது காங்கிரஸ் கட்சியேயாகும். அக்கோரிக்கையை வலியுறுத்தி காங்கிரஸ் கட்சி செய்துவந்த தீவிரமான பிரச்சாரத்தின் விளைவாக, மாகாணங்கள் எவ்வாறு திருத்தி அமைக்கப்பட வேண்டும்என்ற பிரச்சினையில், குறிப்பிட்ட ஒரு முடிவை, அதாவது மொழிவழி அமைப்பு முறையை, நியாயமானது என மக்கள் கருத முன்வந்தனர். அந்தக் கருத்து பல்வேறுவகையான மக்களின் உரிமைப் பிரச்சினையாக உருவெடுத்துவிட்டது. அந்த உரிமைப் பிரச்சினையும் பெரும் அளவில் உணர்வுடன் தொடர்பு கொண்டுவருவது போன்றே, இம்மொழிப் பிரச்சினையும் மக்களின் உணர்வுடன் இணைந்து போய்விட்டது.

மொழிவழி ஏற்பாட்டை முதல் முதலாக மக்களிடை பரப்பினது காங்கிரஸ் கட்சியேயாகும். அதிகாரம் மாற்றப் பெற்றதும், அவ்வழியை நடைமுறைக்கு உடனடியாகக் கொண்டுவரப்போவதாகப் பல முறை வாக்களித்து வந்ததும் அந்தக் கட்சியேயாகும்.

மொழிவழி மாகாணம் தேவை என்ற முழக்கத்தை இப்பொழுதும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் முதல்முதலாக எழுப்பியது காங்கிரஸ் கட்சியேயாகும். அவ்வாறு எழுப்பப்பட்ட முழக்கத்திற்கு இணங்கி ஆந்திர மாகாணத்தை உருவாக்க உடந்தையாகச் செயல்பட்ட கட்சியும் காங்கிரஸ் கட்சியேயாகும்.

அதையே முன்மாதிரியாகக் கொண்டு காங்கிரஸ் கட்சி, மற்றமாகாணங்களையும் மொழிவழியில் திருத்தி அமைக்க உடனடியாக முன்வந்து இருக்க வேண்டும். அத்தகுப் போக்கைத்தான் காங்கிரஸ் கட்சியிடம் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அவ்வாறு எதிர்பார்ப்பதுதான் எதிர்பார்க்கக்கூடியதுமாகும்.

ஆனால் காங்கிரசோ, ஆந்திர மாகாண அமைப்பு விஷயத்தில் தம்மால் ஒப்புக்கொள்ளப்பட்ட நடைமுறையை, மற்ற மாகாண விவகாரங்களில் மேற்கொள்ள முடியாது எனப் பிடிவாதம் பேசத் தொடங்கிவிட்டது. அதற்குக் கொஞ்சமும் சளைக்காதவகையில், காங்கிரஸ் கட்சி காட்டிய மொழிவழிப் பாதையில் தங்களுக்கு ஏற்பட்டுவிட்ட அசைக்க முடியாத நம்பிக்கையை அறுத்துக்கொள்ள முடியாது எனப் பெரும்பாலான மக்களும் பிடிவாதம் காட்டத் தொடங்கிவிட்டனர்,

மொழிவழியில் பெரும்பான்மையினரான மக்களுக்கு இருந்துவரும் பிடிப்பு, காலகதியின் விளைவால் தானாக உருவானதல்ல. அம்மனப்போக்கை மக்களுக்கு ஊட்டியது காங்கிரஸ் கட்சியேயாகும். தானே ஊட்டிய குறிப்பிட்ட மனப்போக்கில் பற்றுக்கொண்டிருக்கிற மக்கள் வழிதான் தானும் இயங்க வேண்டியது கடமையாகும்—அதுவே ஜனநாயக முறையுமாகும் எனமதித்து, மக்கள் மனப்போக்கின்படி நடந்துகொள்ள காங்கிரஸ் முன்வந்து இருக்கவேண்டும்.

ஆனால் காங்கிரஸ் கட்சியோ தனது பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ளத் தவறிவிட்டது. மக்கள் மனப்போக்கிற்கு மதிப்பு வைத்து நடந்து கொள்ளவும் மனங்கொள்ளவில்லை.

மக்கள் மனப்போக்கிற்கொப்ப, தனது புதிய கோலத்தை மாற்றிக் கொள்வது, அதிகாரத்திலுள்ள தனது புகழுக்கும் அந்தஸ்துக்கும் இழுக்கு எனவும் காங்கிரஸ் தவறான முடிவிற்கு வந்துவிட்டது. எனவே, மக்களின் விருப்புக்கு மாறாக உள்ள தனது புதிய போக்கை, துப்பாக்கி முனையில் செயல்படுத்தித் தீருவது என்ற சர்வாதிகாரமுறைக்குக் காங்கிரஸ், தன்னைத் தயாரித்துக் கொண்டு விட்டது.

காங்கிரஸ் மேற்கொண்டு வரும் தவறான போக்கின் எதிரொலிதான், முன்னாள் பம்பாய் எழுச்சியும், இன்னாள் குஜராத்தியர் கிளர்ச்சியுமாகும்.

காங்கிரஸ் மேலிடம் மேற்கொண்டுவரும் தவறான நடைமுறையின் பலாபலன், மேற்குறித்துள்ள இரு சாராரின் கிளர்ச்சி அளவுடன் நின்றுவிடக் கூடியதன்று. குசராத்தியரை மராட்டியரும், மராட்டியரை குசராத்தியரும் கொடும் பகைவர்களாகக் கருதி செயல்படும் அவல நிலையையும், காங்கிரஸ் மேலிடம் கையாண்டு வரும் எதேச்சாதிகாரம் உருவாக்கி இருக்கிறது எனக் கூறுவது மிகையாகாது.

குசராத்தியரையும்மராட்டியரையும்ஒன்றாக இணைத்து போடுவதின்மூலம் இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமையைக் காப்பாற்றிவிட முடியும் என்பது காங்கிரஸ் மேலிடத்தின் திடநம்பிக்கை. அதன் விளைவுதான் இருமொழி, மும்மொழி மாகாண அமைப்பு ஏற்பாடுகள்.

இரு மொழி, மும்மொழி மாகாண ஏற்பாட்டின் விளைவாக எந்த நற்பலனை காங்கிரஸ் மேலிடம் எதிர்பார்க்கின்றதோ, அந்த நற்பலனுக்கு மாறான பலனே கிடைக்கும் வகையில், காங்கிரஸ் மேலிடத்தின் நடைமுறை இருக்கிறது. அதை மெய்ப்பித்துக்காட்டுவதுதான் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு எதிராக மராட்டியர் நடத்தியதும், குஜராத்தியர் நடத்திவருவதுமான மொழிவழி ஆர்ப்பாட்டங்கள்.

பிள்ளைவரம் கேட்கச்சென்று கணவனைப் பறிகொடுத்த காரிகையின் செய்கைபோலவே காங்கிரஸ் மேலிடத்தின் செயல்முறையும் இருந்துவருவது விசித்திரத்திலும் விசித்திரமாகும்.

மத்திய மந்திரியாவார்?

இப்போது ஐதராபாத் மாநிலத்தின் முதன் மந்திரியாகவுள்ள டாக்டர் பி. இராமகிருஷ்ணராவ், வரும் பொதுத் தேர்தலில் மக்கள் சபைக்கு போட்டியிடுவார் என்று தெரியவருகிறது.

மத்திய மந்திரி சபையில் அடுத்தாற்போல மாற்றம் ஏற்படும்போது இராமகிருஷ்ணராவ் ஒரு மந்திரியாக்கப்படலாம் என்றும், இல்லாவிட்டால் திட்டக் குழுவில் ஒரு உறுப்பினராக நியமிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

'மக்கள் தந்த படிப்பினையை மத்திய ஆட்சி மறந்துவிட்டது'

'வல்லாட்சி காட்டும் படிப்பினையைவிட வரலாறு காட்டும் படிப்பினை சிறந்தது'

"ஆமதாபாத் நிகழ்ச்சிகளிலிருந்து, இருமொழி மாகாணப் பிடிவாதக்காரர்களும் இந்தியப் பேரரசினரும், ஒரு முக்கியமான படிப்பினையை அறிந்துகொள்ள வேண்டும். இது ஒரு புதிய படிப்பினையல்ல; பன்முறை மக்களால் வற்புறுத்திக் கூறப்பட்ட படிப்பினைதான். மக்களுடைய கருத்தோடு ஆதரவான தொடர்பு கொண்டு அரசு நடத்துவதை விட்டுவிட்டு அடக்குமுறை வன்செயல்களால் தம்முடைய கருத்தை மக்கள்மேல் சுமத்துவது ஒழுங்கானதல்ல என்பதே அப்படிப்பினையாகும்.

"மொழிவழிக் கொள்கையில் மாகாண எல்லைகளைத் திருத்தி அமைக்க வேண்டுமென்பதே மக்களின் கருத்து. அக்கொள்கைக்கு எதிரிடையாக இருமொழி மாகாணங்கள் அமைக்க வேண்டுமென்பது இந்தியப் பேரரசின் கருத்து.

"'முதற்கோணல் முற்றுங் கோணல்' என்றபடி, இந்தியப் பேரரசினரின் முதல் முயற்சியாகிய வங்காள—பீகார் இணைப்புக் கொள்கை, தொடக்கத்திலேயே தோல்வியுற்றது; அவ்விரு மாகாண முதலமைச்சர்களின் ஒப்பந்தத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். இப்படிப்பினையை இந்தியப் பேரரசினர் மறந்து விட்டனர் போலும்!

"இருமொழி மாகாணக் கொள்கை, ஒற்றுமையை உண்டாக்குவதற்கு மாற்றாக வெறுப்பு உணர்ச்சியை மிகுதியாக்கும் என்பதற்கு குசராத் மக்களின் எதிர்ப்பு இயக்கத்தைவிட வேறு சான்று வேண்டுமோ?

"மக்கள் வெறுக்கிறார்கள் என்று தெரிந்தும் ஒரு கொள்கையைப் பிடிவாதமாகக் கடைப்பிடிக்கும் அரசினருடைய போக்கு வியப்பாகவே இருக்கிறது.

"துப்பாக்கிகளின் வலிமையினால் ஆட்சி நடத்தமுடியும் என்பதற்கு ஹோசியார்புரி, பம்பாய், ஆமதாபாத் முதலிய நகர நிகழ்ச்சிகள் சான்றென்று அரசினர் கருதலாம்; ஆனால் அவ்வாட்சி நீடிக்காதென்பதற்கு ஏராளமான சான்றுகளை வரலாறு காட்டுகின்றது.

"வல்லாட்சி காட்டும் படிப்பினையைவிட, வரலாறு காட்டும் படிப்பினையே சாலச் சிறந்ததென்று அரசினர் உணருவது எக்காலம்?"

—இவ்வாறு, 11—8—55 'தமிழ் நாடு' இதழ், தனது தலையங்கத்தின் ஒரு பகுதியில் குறிப்பிட்டிருக்கிறது.

எண்ணெய் வளம் காண ரூ. 30 கோடியில் திட்டம்

டில்லிக்கு 100 ரஷ்ய நிபுணர்கள் உதவுவராம்

புதுடில்லி, ஆக. 14—

நாட்டில் எண்ணெய் வளங்களைக் கண்டுபிடிப்பதற்காக இந்திய சர்க்கார் ரூ 30 கோடி செலவில் ஒரு திட்டம் வகுத்துள்ளது. அந்தத் திட்டத்தில், உதவி செய்யவிருக்கும் 100 ரஷ்ய எண்ணெய் நிபுணர்கள் அடுத்த ஜனவரியில் வேலையைத் துவக்கக்கூடும் எனத் தெரிகிறது.

தொழில் நுட்பம் தெரிந்த 40 பேர் கொண்ட ரஷ்யக் குழுவினர் இவ்வருட இறுதியில் இந்தியா வந்து சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பஞ்சாபில் எண்ணெய் வளங்கள் நிறைந்துள்ள சுவால்முகி, நூர்பூர், சனூரி, தர்மசாலா ஆகிய பகுதிகளில் அவர்கள் பூவள ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள். இமாசலப் பிரதேசத்திலுள்ள பிலாஸ்பூருக்கும் ஆராய்ச்சி விஸ்தரிக்கப்படலாம்.

'தீண்டாமை நிலவுவது சனநாயகத்திற்கு தரப்படும் அறை கூவலாகும்'

நாகபுரி, ஆக. 14—

"தீண்டாமை இன்னும் நிலவுவது இந்நாட்டில் சனநாயகம் உயிருடனிருப்பதற்கு ஒரு அறைகூவல் தருகிறது," என்று, மத்திய செய்திப் போக்குவரத்து மந்திரி செகசீவன்ராம் கூறியுள்ளார்.

நாகபுரி பிரதேச தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்க ஊழியர்களின் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் அவர் மேலும் சொன்னார்:—

"நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் தீண்டப்படாதவர்கள் என்ற நிலையில் உள்ளனர்; பொருளாதார நிலைமைகளும், சமூக—சமய பட்சபாதங்களும் இந்தப் பிரச்சினையை அடியோடு ஒழிப்பதில் ஏற்படும் கஷ்டங்களை அதிகப்படுத்துகின்றன.

"தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்கள் சமூகத்தில் சாதிபேதம் பாராட்டுவதை அகற்ற வேண்டும்; அவர்களது வாழ்க்கை நிலைமையை அபிவிருத்தி செய்வதில் சுயமாக முயற்சிக்க வேண்டும்."

ஆந்திராவுக்கு மீண்டும் டெல்லி சர்க்கார் எச்சரிக்கை

மாநில நிதி நிலைமை மோசமாக உள்ளதாம்

முதலமைச்சர் கோபால ரெட்டி தகவல்

கர்னூல், ஆக. 12—

"மாநிலத்தின் நிதி நிலைமை மிக மோசமாக இருக்கிறது," என்று, ஆந்திர முதன் மந்திரி கோபால ரெட்டியார் சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"பட்டியல்களுக்கு நாம் பணம் கொடுக்காமலிருப்பதைக் கண்டித்து ஆந்திர சர்க்காரை மீண்டும் டில்லி சர்க்கார் எச்சரித்திருக்கிறது" என்றும், அவர் சபையில் கூறியிருக்கிறார்.

"ஆந்திர மாநிலம் தோன்றிய கடந்த 30 மாதங்களில் ரெவினியூ வரவு-செலவில் மட்டும் ரூ. 11 கோடி பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது; இதர கடன்வகைகள் ரூ. 40 கோடி வரை உள்ளன; பல கடன்களுக்குமாக வட்டி தரவேண்டிய வகையில் ரூ. 2 கோடி நிலுவை உள்ளது," என்றும் அவர் கணக்குக் கூறியிருக்கிறார்.

பாக்கெட் சைக்கிள் பம்பு

நாலரை அங்குல நீளமும், ஐந்து அவுன்சு எடையுமுள்ள சிறியதொரு சைக்கிள் பம்பை ஒரு பிரிட்டிஷ் தொழிற்சாலை தயாரித்து இருக்கிறது. இதில் நைலான் பிஸ்டன் கம்பியும், பிளாஸ்டிக் மூடியும் உண்டு. ஓர் 'அடாப்டரை' பொருத்தி, இதனால் மோட்டார், சைக்கிள் டயர்களுக்குக் காற்றைப் புகுத்த முடியும்.

கைத்தறியாளர்களின் அறப்போர் வெற்றி!

சங்கரன்கோயில் தி. மு. கழகத் தோழர்கள் முயற்சிக்குப் பாராட்டு

சங்கரன்கோவில், ஆக. 14— சங்கரன்கோவில் வட்டாரத்தைச் சுற்றிலும் சுமார் 3,000 கைத்தறிகள் உண்டு; அதை நம்பி வாழும் மக்கள் 10,000-த்திற்கு மேல் அதிகம்; ஆனால், அவ்வட்டத்திலுள்ள நெசவாளர்களின் அன்றாட வாழ்க்கை மிக மோசமான நிலையில் உள்ளது.

ஆட்சியாளர்களின் அலட்சியப் போக்கால் அவதியுற்று, தற்போது அரை வயிற்றுப் பிழைப்புடன் அவர்கள் வாழ்ந்துவரும் நேரத்தில் திடீரென முன்னறிவிப்பு ஏதுமின்றி, இந்நகர் மாஸ்டர் வீவர்கள், பாவு ஒன்றுக்கு ரூ 2 வீதம் குறைத்துவிட்டார்கள்.

உடனடியாக இப்பிரச்சினையை, மாவட்ட தொழில் அதிகாரி அவர்களுக்கும், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், 'நகர கைத்தறி நெசவாளர் சங்கம் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்—மாஸ்டர் வீவர்களின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு முடிவுகட்ட வேண்டும்' என்று தெரியப்படுத்தியதுடன், கூலி கூடுதல் தரும்வரை 10—8—56-ம் நாள் முதல் மாஸ்டர் வீவர் சங்கத் தலைவர் அ. சி. சு. திருக்கோட்டி அவர்களின் வீட்டின் முன்பாக அமைதியான முறையில் அறப்போர் நடத்துவதென்று முடிவெடுத்து, 10-8-56ம் நாள் அறப்போர் துவங்கிற்று.

மேற்படி மாஸ்டர் வீவர் சங்கத் தலைவர் தனது கடையை மூடிக்கொண்டார்; அசம்பாவிதம் எதுவும் நடைபெறாமல் போலீசார் தகுந்த பந்தோபஸ்து செய்திருந்தனர்.

11—8—56 காலை, 'கைத்தறி நெசவாளர் சங்கத்திற்கும் எனக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்று எழுதிக் கொடுத்தால் குறைந்த கூலிக்குக் கூடப் பாவு தருவோம்' என்று கூறிக் கையெழுத்து வாங்க முயற்சித்தார்கள்.

பகல் 10 மணிக்கு, சுமார் 2,000 நெசவாளர்கள் கொண்ட ஊர்வலம் புறப்பட்டு நகர் முழுவதும் சென்றது. மாவட்ட லேபர் ஆபீசர், நெசவாளர்களையும் மாஸ்டர் வீவர்களையும் வரும்படி அழைப்புக் கொடுத்தார். நெசவாளர்கள் சார்பில் நெசவாளர் சங்கச் செயலாளர் தோழர் எம். எஸ் திருவுடையான், சங்கத் தலைவர் ஆ இராமையா, தி. மு. கழகச் செயலாளர் டி ஆர் சுப்பிரமணியம், மற்றும் தி மு. கழகத் தோழர்களுமாகப் பத்து பேரும், மாஸ்டர் வீவர்கள் சார்பில் பிரபல காங்கிரஸ்காரர் ந. கு. சு. தர்மலிங்கம் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்; விவாதத்தின் முடிவில், நெசவாளர்கள் கொடுத்த கூலி குறைவு—மகிமை (தர்மம்) என்ற பெயரால் சங்கரன்கோவிலில் கைத்தறி ஆரம்பித்த நாள் முதலாக சேலை ஒன்றுக்கு பைசா வீதம் வசூலிப்பதும், சேலைகளில் முந்தி அழகுக்குப் போடும் கலர் பட்டுக்கு 0—12—0 செலவும் மாஸ்டர் வீவர்கள் வசூல் செய்வதும் தவறு என்று மிக விளக்கமாக நெசவாளர் பிரதிநிதிகள் விளக்கினர்.

சாக்குகள் பல சொல்லிப் பார்த்தார்கள் மாஸ்டர் வீவர்கள்; ஒன்றும் பலிக்கவில்லை. முடிவில் நெசவாளர்கள் கொடுத்த 'ஸ்டேட்மெண்டு' அவ்வளவும் நியாயம் என்று ஒப்புக்கொண்டு, கூலி குறைத்ததை ஆவணி மாதம் 1-ந் தேதியிலிருந்து பழையபடி கூட்டிக் கொடுத்துவிடுவதாகவும், சேலை முந்தியில் கட்டாரிக்காக இதுவரையிலும் நெசவாளர்கள் தங்கள் சொந்தத்தில் கிரயம் கொடுத்து வாங்கி நெசவு செய்து தந்ததை இனி தாங்களே கொடுத்துவிடுவதாகவும், துவக்கத்திலிருந்து இதுநாள் வரை சேலை ஒன்றுக்கு ஒரு பைசா வீதம் தர்மம் (மகிமை) என்ற பெயரால் வசூலித்ததை நிறுத்திவிடுவதாகவும் அவர்கள் உறுதியளித்தார்கள். அதன் பிறகு அறப்போர் நிறுத்தப்பட்டது.

சங்கத்தின் முயற்சிக்கும் தி. மு. கழகத் தோழர்களின் முயற்சிக்கும் நெசவாளர்கள் மிகவும் பாராட்டுதல் தெரிவித்துக்கொள்கிறார்கள். (ந. கி)

விவரங்களை வெளியிடுவது உசிதமில்லையாம்!

சென்னை, ஆக. 13— "இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள கச்சா தீவு யாருக்குச் சொந்தம் என்பது குறித்து இந்திய சர்க்கார் அனுப்பிய கடிதத்திற்கு சென்னை சர்க்கார் பதில் அனுப்பியுள்ளது; அதன் விவரத்தை வெளியிடுவது உசிதமில்லை" என்று, சென்னை சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது நீதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

கைத்தறிகளைப் பதிவு செய்ய!

சகல உதவிகளும் அளிக்கப்படுமாம்

சென்னை, ஆக 13— "இந்திய சர்க்கார் பிறப்பித்துள்ள உத்திரவுப்படி சென்னை மாநிலத்தில் கைத்தறிகளைப் பதிவு செய்ய சர்க்கார் சகல உதவிகளையும் அளிப்பர்," என்று, அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

"கைத்தறித் தொழிலுக்கு உதவும் பொருட்டு புள்ளி விவரங்கள் திரட்டவே பதிவு முறை கொண்டு வரப்பட்டுள்ளது; இதனால், கைத்தறியாளருக்குப் பாதகம் ஏற்படாது. இதை நெசவாளர்களுக்கு விளக்கி, அவர்களது பயத்தைப் போக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இதுபற்றித் துண்டுப் பிரசுரங்களைத் தமிழில் அச்சிட்டு நெசவாளர்களுக்கு விநியோகிக்க சர்க்கார் உத்தேசித்திருப்பதாயும் அவர் தெரிவித்தார்.

பதிவு செய்துகொள்வதால், புதிதாகக் கைத்தறி நெசவுத் தொழிலில் யாரும் பிரவேசிக்கத் தடையிராது என்றும், இத்தொழிலை விரிவுபடுத்தத் திட்டம் இருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இராசபாளையத்தில் தீ விபத்து

தி. மு. கழகத் தோழர்களின் பொருளுதவி

இந்நகரின் தென் பகுதியிலுள்ள ஆண்டதம்மன் கோவில் தெருவில் 27—7—56-ல் தீவிபத்து ஏற்பட்டுப் பல சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

29—7—56-ல் தி மு. கழகச் சார்பில் நடைபெற்றப் பொதுக் கூட்டம் ஒன்றின்போது கழகத் தோழர்கள், தீவிபத்தில் பாதிக்கப் பட்டோருக்கு உதவுவதற்காக உண்டியல் எடுத்து ரூ. 35—9—6 வசூல் செய்தனர். பின்னர் அந்தப் பணத்துடன் கிளைக் கழக இருப்புத் தொகையிலிருந்து ரூ 35 சேர்த்து ஆக மொத்தம் ரூபாய் 70—9—6-ஐயும், அந்தத் தொகுதி கவுன்சிலர் இராமகிருஷ்ணராஜா தலைமையில் கழகத் தோழர்கள் எஸ். முத்துசாமி, த. கனகசபாபதி, பெ. சு. கந்தையா, கோ. சந்திரன், திரவியமணி, எஸ். எம். முத்து ஆகிய தோழர்கள் உடன்சென்று, விபத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தவருக்கும் ஒரு படி அரிசியும் 4 அணாவும் கொடுத்திருக்கின்றனர்.

பொதுக்கூட்டத்தில் தோழர்கள் மு. கருணாநிதி, எஸ் முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். (ந கி)

பலகட்ட விற்பனை வரி விதிப்பிற்கு எதிர்ப்பு வலுக்கிறது

திருநெல்வேலி வர்த்தகர்கள் கடைகளை மூடினர்

திருநெல்வேலி, ஆக 10— சென்னை சர்க்காரின் பல கட்ட விற்பனை வரி முறையை ஆட்சேபிக்கவும், ஒரு முனை வரி விதிப்பிற்கு ஆதரவு காட்டவும் திருநெல்வேலி டவுன், ஜங்ஷன் வியாபாரிகள் பிற்பகல் வரை கடையடைத்தனர்.

முற்பகலில் டவுன் மகமைச் சங்க மேடையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. நெல்லை வர்த்தகர் சங்கத் தலைவர் ப. வ. உ. சேதுராம சுப்ரமணியம் தலைமை வகித்தார். தமிழ் நாடு வர்த்தகர் சங்கத் தலைவர் கேசவலால் காளிதாஸ் சேட், வி. வி. சண்முகம், வி. கணபதி, ஜனாப் மீரான் முகைதீன் ராவுத்தர், ஜனாப் கே. எம் முகமது சாலிகு ராவுத்தர், அருணாசலம், அற்புதம் பர்னாந்து, டி எஸ் கணபதி சுந்தரம் ஆகியோர் பல கட்ட விற்பனை வரி விதிப்பை ஆட்சேபித்து ஒருமுனை விற்பனை வரியாக அமுல் செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினர்.

பலகட்ட விற்பனை வரியை அமுல் செய்வதைக் கைவிட்டு, ஒருமுனை விற்பனை வரியை அமுல் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டும், அத்தியாவசிய உணவுப் பொருள்கள்மீது விற்பனை வரி விதிப்பதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும், விற்பனை வரிச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட இருக்கும் மூன்றாவது திருத்த மசோதா வியாபாரிகளுக்குப் பாதகம் விளைவிப்பதாக இருப்பதால் திரும்பப்பெற வேண்டுமென்றும், விற்பனை வரி ஆலோசனைக் கமிட்டியில் மாவட்டவாரியாகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

'முறை'யை மாற்றினர்—'முறைகேடு' நீங்கவில்லை!

பல நூற்றாண்டுகளாகத் திருப்பதியிலுள்ள திருமலைமீது இந்துக்களல்லாதவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை; ஆனால் இப்போது, இந்துக்களல்லாதவர்கள் கோயில் நிர்வாக அதிகாரியிடம் முன்னதாக அனுமதி பெற்று மலைமீது ஏறலாமென்றும், ஆனால் கோயிலுக்குள் செல்லக்கூடாது என்றும் கோயில் நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனராம்; அன்றியும், மலைமீது கையாளப்படும் நடைமுறைகளை இவர்கள் பின்பற்ற வேண்டுமாம்!

நிராகரிப்பு!

லண்டன், ஆக. 13— சூயஸ் பிரச்சினை பற்றி 16-ந் தேதி லண்டனில் நடைபெறவிருக்கும் மாநாட்டை ஒத்திவைக்குமாறும், மேற்கொண்டு 22 நாடுகளை மாநாட்டுக்கு அழைக்குமாறும் ரஷ்யா தெரிவித்திருந்த யோசனையை பிரிட்டன் நிராகரித்துவிட்டது.

கழகச் செய்திகள்

வேலூர் (சேலம்) தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

10—8—56 மாலை 6½ மணிக்கு, வேலூர் வ. உ. சி திடலில் தோழர் எஸ். நரசு தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் லோ. கருப்பையா, வி. ஏ. இராமநாதன், சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். வேலூரில் (சேலம்) மாவட்டக் கழகத்தவரால் நடத்தப்படும் மருத்துவ மனையில் போதிய வசதிகள் இல்லாமல் மக்கள் அவதியுறுவதால் அதை அரசாங்கம் உடனடியாகத் தானே ஏற்று நடத்தி, ஒரு பெண் மருத்துவரையும் நியமிக்குமாறு கேட்டுக்கொண்டும், கடந்த பிப்ரவரி-20 பொது வேலை நிறுத்தம் சம்பந்தமாகச் சிறை சென்று மீண்ட கழகத் தோழர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பவானி வட்டத்தில் தி.மு. கழகத் தொகுதிக் குழு அமைப்பு

கவுந்தப்பாடி, ஆக. 14— பவானி வட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின் சார்பில் கடந்த 12-ந் தேதியன்று காலை, பவானியில் தோழர் வெங்கடாசலம் இல்லத்தில், தோழர் அ. பெ. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தின்போது, தொகுதிக் குழு அமைப்பது குறித்துத் தோழர்கள் பி. டி. சுவாமிநாதன், இரா. துரை ஆகியோர் பேசினர். தொகுதிக் குழு ஒன்று அமைப்பதற்கான பொறுப்பும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தோழர் இரா. துரை கேட்டுக்கொள்ளப்பட்டார்.

இக்கூட்டத்தில், பவானி, கவுந்தப்பாடி, அய்யம்பாளையம், குருவரெட்டியூர் தி மு. கழகக் கிளைகளினின்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். குழுவின் தீர்மானங்களை ஆதரிப்பதாக அத்தாணி கிளைக் கழகச் செயலாளர் கடிதம் மூலம் ஒப்புதல் தெரிவித்திருக்கிறார். (ந. - கி.)

சோழவந்தான் தி. மு. க.

25—7—56 இரவு 8 மணிக்கு செல்லம் சைக்கிள் கடையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழகக் கட்டிடம் வாங்குவதற்குத் தோழர் எஸ் பழனியாண்டவன் தலைமையில் நிதி வசூலிப்பதென்றும், தேங்காய் வெட்டுத் தொழிலாளர்களின் குறைகளைப் போக்க, கழகத் தோழர்கள் முதலாளிகளை அணுகுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. தோழர் எஸ் செல்லத்துரை அவர்களுடைய ஆண் மகவுக்குத் தோழர்கள் அனைவருமாக 'மனோகரன்' என்று பெயர் சூட்டினர். தோழர் சுப்பிரமணியன் எல்லோருக்கும் தேனீர் விருந்து வழங்கினார்.

குமணநகர் தி. மு. கழகம்

8—8—56 இரவு 9 மணியளவில் தோழர் வி. பி. சாமி தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், செயலாளர் தோழர் வி. பி. சாமி, மாவட்டப் பிரதிநிதி தோழர் ந. கோபால் ஆகியோர் கழக வேலைகளில் ஈடுபட முடியாத காரணத்தையொட்டி, அவர்கள் பொறுப்புக்கு மற்றிருவரைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நடைபெற்ற தேர்தலில் தோழர் வே. காசிமுத்து, இரா. காதல்பித்தன், சு. இராசமாணிக்கம் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இறுதியில், அவ்வூரில் விரைவில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கடையநல்லூர் நகர தி. மு. கழகம்

9—8—56 இரவு 10-45 மணியளவில், தோழர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற நகரக் கழகப் பொதுஉறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் பி. ஆறுமுகம் எஸ். எஸ். சாகுல்அமீது ஆகியோர் உறுப்பினர்களின் கடமை குறித்துப் பேசினர். பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் முன்னிலையில், காலியாக இருக்கிற துணைச்செயலாளர், செயற்குழு உறுப்பினர் ஒருவர் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் எஸ் எஸ். சாகுல் அமீது, பா. சுப்பையா ஆகியோர் முறையே துணைச் செயலாளராகவும், செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியில் தோழர் சம்பத் அவர்கள் உறுப்பினர்களின் பொறுப்புகள் குறித்து விளக்கவுரையாற்றினார்

அகரக்கொந்தை தி. மு. க. துவக்க விழா

30-7-56 மாலை 6-30 மணிக்கு தோழர் சௌந்தரராசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கிளைக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சி. ஐய்பு, என். சிட்டப்பா, சௌந்தராசன், சின்னப்பா ஆகியோர் பேசினர்.

கடையநல்லூரில் கழகப் பொதுக்கூட்டம்

9—8—56 இரவு 8-30 மணியளவில், மறுமலர்ச்சி திடலில், தோழர் சி. சண்முகம் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், தோழர் ஈ வெ. கி. சம்பத் அவர்கள் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். தோழர் சம்பத் அவர்களுக்குப் பல மன்றங்கள், தொழிலாளர் அமைப்புகளின் சார்பில் வாழ்த்து இதழ்களும், கைத்தறித் துண்டுகளும் வழங்கப்பட்டன.

எட்டயபுரம் தி. மு. கழகம்

7—8—56 இரவு 8½ மணிக்கு, தோழர் என். எஸ். சுப்பையா இல்லத்தில், தோழர் கே. சண்முகவேல் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், சர்க்கார் விசைத் தறிகளைப் புகுத்த இருப்பதைக் கண்டித்தும், பட்டு நூல் நெசவாளர்களுக்குச் சர்க்கார் தரும் உதவியைப்போல் நூல் நெசவாளர்களுக்கும் தரவேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ராப்ராய் தி. மு. கழகம்

6-8-56ல், அரவேனில் உள்ள ராப்ராய் தி மு கழக அலுவலகத்தில், தோழர் ஆர். தங்கவேல் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், அடுத்த மாதம் 17-ந் தேதியன்று பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

சென்னை நகரச் சிறுவர் சங்கம்

12—8—56 காலை 10 மணிக்கு, சூளை கலியாணமேஸ்திரி தோட்டத்தில் சிறுவர்கள் விழா தோழர் பி. பாலகோபால் தலைமையில் நடைபெற்றது. தோழர் நாகப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாணவர்கள் ஆலன், சுப்பிரமணியம் ஆகியோர் கதைகள் சில சொன்னார்கள். பின்னர் குழந்தைகளின் கதம்ப நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர்கள் எஸ். எஸ். ராசன், குழந்தைவேலு, கன்னியப்பன், என். எம். சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குடியரசுத் தலைவர் குதர்க்கவாதம்!

அன்று ஆயுத பலத்தால் ஆதிக்கம் ஏற்பட்டதாம்!

இன்று மக்கள் விருப்பத்தால் 'ஒற்றுமை' உருவாகியுள்ளதாம்!

வடக்கு தெற்கை அடிமைகொள்ளவில்லையாம்!

தென்னாடுதான் வடநாட்டை அடிமை கொண்டுள்ளதாம்!

"தென்னாட்டை வடநாடு வெற்றி கண்டது எனக் கருதுவது, அந்தச் சொல்லுக்குரிய எந்தப் பொருளிலும் தவறுடையதேயாகும். சொல்லப்போனால், தென்னாடுதான் வடநாட்டை வெற்றி கண்டிருக்கிறது என்றே கூறவேண்டும்.

"இந்தியாவின் மிகத் தெற்குக் கோடியிலிருந்து சங்கராச்சாரியார் சென்று இமாலயத்தில் ஒரு மடத்தையும் அல்லது காஷ்மீரில் ஒரு மடத்தையும், கிழக்குக் கரையோரத்திற்குச் சென்று பூரியில் ஒரு மடத்தையும் அல்லது துவாரகையில் ஒரு மடத்தையும் நிறுவியது, அந்த வெற்றியை நிலைநாட்டினதாகாதா?

"நாடு முழுவதும் இல்லையென்றாலும், நாட்டின் பெரும் பகுதியைத் தங்கள் ஆட்சியின்கீழ் கொண்டுவர அரசர்களாலும், அரசர்க்கரசர்களாலும் முயற்சிக்கப்பட்டிருப்பது உண்மையேயாகும். அவர்கள் நிலைநாட்டப் பார்த்த ஆதிக்கமும், நாம் இன்று உருவாக்கி இருக்கிற 'ஒற்றுமையும்' ஒன்றுக்கொன்று அடிப்படையில் மாறுபட்டு இருப்பவையாகும். வெற்றிபெற்றதின் விளைவாக ஒரு அரசர்க்கரசருக்கு இயல்பாக ஏற்படுகின்ற பேராவாவின் தூண்டுதலாலும், கண்காணிப்பாலும் அவ்வாதிக்க முயற்சி ஆயுத பலத்தின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும்.

"ஆனால், இன்று நாம் நிர்மாணித்திருக்கின்ற அரசியல் ஒற்றுமையோ, இப்பெரிய தேசத்தின் மக்களுடைய சுதந்திரமான விருப்பத்தின் விளைவாகும்; அவ்விருப்பம், அவர்கள்தம் பிரதிநிதிகள் அரசியல் ஆக்கமன்றத்தில் கூடி இத்தேசத்தில் குடியரசை நிறுவ முடிவுகட்டியபோது செயல்பட்டது. அவ்வகையில், மக்கள் ஒப்புதல் பெற்று இன்றைய அரசியல் ஒற்றுமை உருவாக்கப்பட்டு இருக்கிறது; பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, பலாத்கார முறையில் அல்லாது மக்களின் ஒப்புதலுடன் உருவாக்கப்பட்டிருந்த கலாச்சார ஒற்றுமையுடன் இவ்வரசியல் ஒற்றுமையும் இணைந்துவிட்டது.

"இந்தியா கடந்த ஓராயிரம் ஆண்டுகளில், எத்தனையோ முறை 'ஒற்றுமை இன்மை'யால் கஷ்டப்பட்டிருப்பது நமக்குத் தெரியும். பலமுறை இந்தியா அப்படிக் கஷ்டப்பட்டது. காரணம், அப்போது ஆட்சியிலிருந்தவர்கள், இந்தியா முழுவதையும் ஒருசேரக் கண்ணுறவில்லை; தங்களின் கவனத்திற்கும் ஆதரவிற்கும் உரியதாகக் கருதினர்.

"எப்போதாவது ஒரு சாம்ராஜ்யம் நிறுவப்பட்டால், அந்த சாம்ராஜ்யத்தின் அதிபர்களாக இந்துக்களானாலும் முஸ்லீம்களானாலும், அந்த சாம்ராஜ்யத் தலைநகர் வடக்கிலிருந்தாலும் தெற்கிலிருந்தாலும், ஒவ்வொரு சாம்ராஜ்யத்திலிருந்தும் சிலர் பிரிந்து செல்லவேண்டும் என்று முயற்சி செய்து, தனித்துச் சென்று சுதந்திர நாடுகள் அமைத்துக்கொண்டிருக்கின்றனர் என்பது, நமது சரித்திரத்தில் காணப்படும் வருத்தந்தரும் சம்பவங்களாகும். அப்படித்தான், அவ்வப்போது நிறுவப்பட்ட அரசியல் ஒற்றுமை, குலைக்கப்பட்டது.

"வெள்ளையர் வந்த பின்னர்தான், அவர்களால் இந்தியா முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவர முடிந்தது.

"இன்று நமது குடியரசு, இமயம் முதல் குமரி வரையும், கீழ்க்கோடி முதல் மேல் கோடி வரையும் வியாபித்திருக்கிறது.

"நமக்கு இப்போது ஒரே அரசியல் சட்டம்தான் உள்ளது. அது எல்லா மக்களுக்கும் உரியது.

"நம்மிடையே மொழி வேறுபாடுகள், மத வேறுபாடுகள், பழக்கவழக்க வேறுபாடுகள், உணவு உடையிலும் கூட வேறுபாடுகள் இருக்கலாம்; ஆனால், இந்த வேறுபாடுகளுக்குப் பின்னால் சமூக அமைப்பு என்ற 'ஒற்றுமை' இருக்கிறது.

"இப்போது நம்மிடை அரசியல் 'ஒற்றுமை'யும் இருக்கிறது; எனவே நாம், இந்த 'ஒற்றுமை'யைப் பாதுகாத்து, இந்தியாவை மேலும் பலமுள்ளதாகவும் வளமுள்ளதாகவும் ஆக்குவதே விவேகமானதாகும்."

—என்று, சென்னை நகரசபை வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் அவர்கள் கூறியுள்ளார்.

கழகக் கூட்டம்

★

திண்டுக்கல் :
சோலை ஹால் திடல்
17—8—56 இரவு 7 மணிக்கு
பேசுவோர் :
என். வி. நடராசன்
எஸ். முத்து

★

தில்லைவிளாகம் :
இராமர் கோயிலுக்கு முன்பு
17—8—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
ந. தருமலிங்கம்
இரா. நடராசன்

மதுரை நகர தி. மு. கழக மாணவர் கிளை

"19—8—56-ல், மதுரை நகர் தி. மு. கழக—மாணவர் கிளையின் புத்தாண்டுச் செயற்குழுத் தேர்தல் நடைபெறும். இவ்வாண்டிற்கு, மாணவர் கழக உறுப்பினர்கள், மதுரை வடக்குமாசி வீதி எண்-21 கழகக் கட்டிடத்தில் சேர்க்கப்படுவார்கள். திராவிட மாணவத் தோழர்கள் உடனே பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, செயலாளர் எஸ். ஆர். கே. தேவிநாதன் அவர்கள் அறிவிக்கிறார்.

கோட்டை விட்டபின் கூச்சல் போடுகின்றனர்

ஒப்புக்கொண்டதைப் போல் இரண்டு மடங்கு பகுதி பறிபோயின!

செங்கோட்டை பிரிவினையில் தமிழருக்கு நேர்ந்த கதி!

தவறைத் திருத்த காமராசர் டெல்லியிடம் முறையீடு

புதுடில்லி, ஆக. 14—

தமிழ் வழங்கும் செங்கோட்டை தாலுகாவின் பகுதிகள் குறித்து, சென்னை—திரு-கொச்சி சர்க்கார்களுக்கிடையே அண்மையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் நிகழ்ந்துவிட்ட தவறு ஒன்றை திருத்திக்கொள்ள வேண்டும் என்று சென்னை முதல் மந்திரி காமராசர், மத்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த்திற்கு அவசரக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறாராம்.

கடிதம் கே. டி. கோசல்ராம் மூலம் டில்லி வந்து சேர்ந்துள்ளதாம்.

மக்கள் சபையில் மாநில புது அமைப்பு மசோதா விவாதத்தின் கடைசி நாளன்று, வாக்கெடுப்பிற்குச் சிலமணி நேரத்திற்கு முன்புதான் பந்த் கையில் கிடைத்தது என்பதால், கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி தவறு திருத்தப்பட முடியாது போயிற்றாம்!

இப்போது 'பறிபோய்'விட்ட செங்கோட்டையின் மலைப் பிரதேசங்களை மீட்பதற்குத் தமிழ்நாடு காங்கிரஸ் மக்கள் சபை உறுப்பினர்கள் இறுதி முயற்சி செய்துகொண்டிருக்கின்றனராம்!

செங்கோட்டை தாலுகாவில் கேரளத்திற்குத் தருவதாக ஒப்புக்கொண்ட பிரதேசங்களைவிட, இப்போது மசோதாவில் அதிகமான பிரதேசம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், இது தவறான விபரங்களை வைத்துக் கணக்கிடப்பட்டது என்றும், எனவே இப்போது தவறினைத் திருத்தவேண்டும் என்றும் முதன் மந்திரி காமராசர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

நிறைவேற்றியுள்ள மசோதாவின்படி ஒப்புக்கொள்ளப்பட்டதைப்போல இரண்டு மடங்கு பிரதேசங்கள் இப்போது கேரளத்திற்குப் போய்ச் சேருகிறதாம். இந்தப் புதிய எல்லைகளை திரு-கொச்சி சர்க்கார் வெளியிட்ட பிறகே சென்னைக்கு, தங்களின் ஏமாளித்தனம் புரியவந்ததாம்! சென்னையின் கோரிக்கைக்கு டில்லியில் அனுதாபம் இருந்தாலும், இப்போது மிகவும் காலங்கடந்துவிட்டது என்றும், எனவே இந்த விவகாரத்தை, அமையவிருக்கும் மண்டலக் குழுவின் முடிவுக்கு விட்டுவிடலாம் எனவும் டில்லி கருதுகிறதாம்!

இரண்டு இலட்சம் மக்கள் தடையைமீறி ஆர்ப்பாட்டம்

ஏழாவது நாளன்றும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் இல்லங்கள் தாக்குதலுக்கு இலக்காகின்றன

அகமதாபாத்தில் 'அர்த்தால்' நீடிக்கிறது

அகமதாபாத், ஆக. 14—

ஏழாவது நாளாக இன்றும் போலீசார் இங்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஒருவர் உயிரைப் பலிகொண்டதுடன் பலரைப் படுகாயப்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

இன்று அகமதாபாத் நகரில் பகல் இரண்டு மணிமுதல் மறுநாள் காலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாம்.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுமுன், நகரசபை பஸ் ஒன்றின் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கல் எறியத் தொடங்கியதாகவும், அந்தச் சம்பவத்தின்போது போலீசார் துப்பாக்கியை முடுக்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

நகரத்தில் தொடர்ந்து அர்த்தால் நீடித்துவருவதாகவும் கூறப்படுகிறது.

இருமொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்க்கும் பி. சோ. கட்சி தீர்மானம் ஒன்றை நகரசபை விவாதிக்க இருப்பதால், அப்போது நகரசபை முன் ஆர்ப்பாட்டங்கள் எதும் கூடாது என்பதற்காகவே ஊரடங்குச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாம்.

நேற்று மாலை, போலீசார் இரண்டுமுறை துப்பாக்கிப் பிரயோகமும், எண்ணற்ற முறைகள் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்தனர் என்று தெரியவருகிறது.

விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவுகளை மீறி 2 இலட்சம் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், குஜராத் காங்கிரஸ் தலைவர் முதலிய காங்கிரஸ் தலைவர்களின் இல்லங்களையே தங்களின் தாக்குதலுக்கு இலக்கு ஆக்கிக்கொண்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

பொதுச்செயலாளருக்குக் குடந்தை..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள் நகராட்சியின் 'பட்டேல் மன்றத்'திற்கு வந்துசேர்ந்தார்.

குடந்தை நகராட்சித் தலைவர் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்களும், துணைத் தலைவர் பி. ஆர். பொன்னுச்சாமி அவர்களும், ஆணையர் முத்துராமலிங்கம் அவர்களும் வாயிற்படியில் நின்று பொதுச் செயலாளரை வரவேற்று மண்டபத்திற்குள் அழைத்துச் சென்றனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் மண்டபத்தின் உள்ளும் புறமும் மிக நெருக்கிக்கொண்டு குழுமியிருந்தனர். பொதுச்செயலாளர் மண்டபத்தில் நுழையும்போது குழுமியிருந்த மக்கள் பெருத்த கையொலி செய்து ஆரவாரத்துடன் வரவேற்றனர். நகர முக்கியஸ்தர்களும் மாணவர்களும், இளைஞர்களும் பெருவாரியினராகக் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

முதலில் நகராட்சித் தலைவர் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு நகராட்சித் துணைத் தலைவரையும், ஏனைய உறுப்பினர்களையும், நகராட்சி அதிகாரிகளையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

பின்னர் வாழ்த்துப் பாடல் பாடிய பின், நீண்டதொரு வரவேற்பு இதழை நகராட்சித் தலைவர் படித்துப் பொதுச் செயலாளருக்கு மாலை சூட்டி பெருத்த ஆரவாரத்திற்கிடையே அளித்தார்.

வரவேற்புக்குப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பதிலளித்த பின்பு, நகராட்சித் துணைத் தலைவர் தோழர் பி. ஆர். பொன்னுச்சாமி அவர்கள் நன்றி நவில கூட்டம் மாலை 5-45 மணிக்கு இனிது முடிந்தது. (ந. சி.)

நெருக்கடியைத் தவிர்க்க நேரு செல்லக்கூடுமாம்!

அவசியமென்ற நிலைமை ஏற்பட்டால், சூயஸ் மாநாட்டில் கலந்துகொள்ளுவதற்காகப் பிரதமர் நேரு இலண்டன் செல்வதானால்கூட அதைப்பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லையாம்!

ரஷ்யாவிற்கு ஆறுதமிழ்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ணிக்கையில் அறிவிப்பாளர்கள் வேண்டுமெனவும் ரஷ்ய சர்க்கார் கேட்டுள்ளதாம்.

மாநிலங்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதில்தரும்போது இந்தத் தகவல்களைக் கூறிய பிரதமர் சீன சர்க்காரிடமிருந்து மொழிபெயர்ப்பாளர்கள் வேண்டுமென கோரிக்கை வரவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

நகரசுத்தியாளர்கள் ஊர்வலம் சென்றனர்

குப்பை வண்டிகளை இழுக்கும் 200 எருமைகள் முன்செல்ல, குவாலியர் முனிசிபல் கழகத்தைச் சேர்ந்த 400 நகரசுத்தித் தொழிலாளர்கள் அதிகச் சம்பளம் கோரி நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாகச் சென்றனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.